LIBRARY
16 JUN 1966
STATE LEGISLATURE

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 5th February 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock Mr. Speaker (The Hon. Sri S. Chellapandian) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

வடக்குக்கோட்டையில் சம்பவம்

* **குறுகிய கால கேள்வி எண் 1. திரு. ஆ. கு. சுப்பையா : கனம்** முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, வடக்குக் கோட்டை ஹரிஜனங்களை மேற்படி கிராம ஜாதி இந்துக்கள் 1966-ம் ஆண்டு ஜனவரி மூன்றாவது வாரத்தில் அடித்து துன்புறுத்தி மொட்டை அடித்து மானபங்கம் படுத்தியது உண்மையா?

(இ) எதற்காக மானபங்கம் படுத்தப்பட்டார்கள்?

(உ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (c) : The Government have no information. Enquiries are being made and a statement will be placed on the Table of the House shortly.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், இதுபோல் இன்னும் பல இடங்களில் சட்ட விரோதமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். ஆகையால், ஹரிஜனங்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்க போலீஸ் இலாகாவிற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது பொதுவான கேள்வி. புதிதாக போலீசாருக்கு உத்தரவு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. எப்போதும், இந்தக் கேள்வியில் குறிப்பிட்டபடி துன் புறுத்தப்படாமல் இருக்க அவர்கள் கண்காணிப்பாக இருப் பார்கள்.

திரு. ஆ. கு. சுப்பைய்யா : ஸார், இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தகவல் இல்லை என்று சொன்னேன். ஆனால், நான் கேள்விப்பட்ட வரையில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். போலீசில் கேஸ் ரிஜிஸ்டர் செய்திருப் பதாகத் தெரிகிறது. விவரம் தெரியாததால்தான் தகவல் இல்லை என்று சொன்னேன்.

[5th February 1966

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து மாறி காங்கிரஸ் கட்சியில் ஹரிஜனங்கள் சேருகிறார்கள். அப்படிச் சேருகிறவர்களை பலாத்காரப்படுத்தி, பல இடைஞ்சல்களைச் செய்து வருகிறார்கள். அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த மாதிரி நடைபெறுவதாகவும் தகவல் வராமல் இல்லை. அதைப் பற்றியும் போலீசார் கவனம் செலுத்துவார்கள்.

Mudukulathur school building

*101 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be please to state—

(a) whether the Government have investigated the reasons for the collapse of the District Board School building in Mudukulathur in Ramanathapuram district in May 1964;

(b) if so, the details thereof; and

(c) the extent of the damages caused?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The building collapsed due to heavy gale and sharp-showers.

(c) Rs. 12,500.

திரு. செ. மாதவன் : ஸார், அந்தக் கட்டடம் கட்டி எத்தனை ஆண்டுகள் ஆயிற்று ? பின்னால் இடிந்ததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எத்தனை ஆண்டுகள் என்று குறிப்பாகத் தகவல் இல்லை. சில ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. பழைய கட்டடம் தான். இந்தக் கட்டடம் தனியாகக் கட்டப்பட்டிருக்கிறது. பக்கத்தில் வேறு கட்டடத்தோடு சேர்ந்து இல்லை. புயல் காற்று அடித்தபோது பலமாக அடித்தது. இந்தக் கட்டடம் அதை எதிர்த்து நிற்க முடியவில்லை.

திரு. செ. மாதவன் : ஸார், இந்தக் கட்டடம் இடிந்தபோது அங்கே சிறுவர்கள் இருந்ததாகவும், அவர்களுக்குச் சேதம் ஏற்பட்டதாகவும் தகவல் கிடைத்ததா ? அப்படியானால் அவர்களுக்குச் செய்த உதவி என்ன ?

கனம் திரு. எம்: பக்தவத்சலம் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

திரு. சா. கணேசன் : இந்தக் கட்டடம் சிமெண்ட், செங்கல்லால் கட்டப்பட்டதா ? காண்ட்ராக்ட் மூலமாகக் கட்டப்பட்டதா ? அப்படியானால் காண்ட்ராக்டர்களிடமிருந்து எத்தனை நஷ்டஈடு வசூலிக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எவ்வாறு கட்டப்பட்டது என்ற தகவல் இல்லை. நான் முன்பே குறிப்பிட்டபடி, கட்டடம் விழுந்ததற்கு முக்கிய காரணம் "ஹை விண்ட் ப்ரெஷர்" தான். கட்டடம் காரணம் அல்ல.